பக்கங்கள்:-18

# காலை முரசு

| முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 17 | வெள்ளிக்கிழமை | 02.08.2024 | அதிர்வு 366 |
|---|---|---|---|---|---|

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட**

## இதுவரை 10 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தினர்

வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நேற்று வரையான காலப் பகுதிக்குள் மாத்திரம் 06

* மாகாண சபைத் தேர்தல் சட்டம் உடன் நாடாளுமன்றுக்கு
* காணிச் சீர்திருத்த ஆணைக்குழு பிரகடனம் வெளியாகும்
* 13 இல் பறிக்கப்பட்ட அதிகாரங்கள் விரைந்து மீளளிப்பு
* பொலிஸ் அதிகாரப் பகிர்வு பின்னர் பேசி முடிவெடுக்கப்படும்

# ரணில் - சுமந்திரன் பேச்சில் இணக்கம்

## ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு உடனடியாகவே மாகாண சபைத் தேர்தல்



தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு ஆக்கபூர்வமான தீர்வு காண்பதற்கான முன் ஆயத்தமாக சில நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பதற்கு நேற்று தம்மைச் சந்தித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதிசட்டத்தரணிஎம்.ஏ.சுமந்திரனிடம்இணக்கமும் உறுதியும் தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. 06




காலகதி பிசகாமல்
காலை தோறும்
உங்களை நாடி வரும்
காலை முரசுக்கு இன்று
முதல் ஆண்டு நிறைவு.
நாளை 2ஆம் ஆண்டில்
அது கால் பதிக்கின்றது.
இச்சந்தர்ப்பத்தில் நம்முடன்
தோன்றாய்த் துணையாக
தோள் கொடுத்து நிற்கும்
நம் வாசகர்கள், ஆதரவாளர்கள்,
செய்தியாளர்கள், பத்தியாளர்கள்,
விளம்பரதாரர்கள் சகலரையும்
நன்றியுடன் நினைவு கூர்கின்றோம்.

- முரசு குழுமம் -

# மாயமான இந்திய மீனவரை தேடும் பணி இன்றும் தொடரும்

## கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)



இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும்இலங்கைக்கடற்படையினரால்இணைந்து மாயமான இந்தியமீனவரைத் தேடும் பணி நேற்று வெற்றியளிக்காத நிலையில் இன்றும் தேடுதல் பணிகள் தொடரும்என்று இலங்கைக் கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் கயான் 06




ஜனாதிபதித் தேர்தலுக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்ய இன்னும் இரண்டு வாரங்கள் கூட இல்லை. வாக்களிப்புக்கு இன்னும் சரியாக ஐம்பது நாள்கள் தான் உள்ளன.

தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற குறைப் பிரசவத்திற்காக அவசர அவசரமாக களத்தில் குதித்த தரப்புகள், இன்னும் பொது வேட்பாளரைக் கண்டுபிடிக்கவேயில்லை. அந்தப் பொது வேட்பாளர் திட்டத்திற்கு கயிறைக் கொடுத்த நீதியரசர் விக்னேஸ்வரன் பொது வேட்பாளர் ஒருவரை கண்டுபிடிப்பதற்கு இரவு – பகலாகத் தேடுதல் வேட்டை நடப்பதாக அடுத்த கயிறை வழங்கியிருக்கின்றார்.

நேற்று முன்தினம் கொழும்பில் கோல்பேஸ் ஹோட்டலில் சுவிஸ் நாட்டின் தேசியத் தின நிகழ்வு இடம் பெற்றது. தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான பொது ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட தரப்புகள் சிலவும் அங்கு பிரசன்னமாகி இருந்தன. ஒருவர் உச்ச சந்தோஷத்தில் இருந்தார். அதிக அளவில் வைன் அருந்திய மகிழ்வு போலும்.

அந்த மகிழ்வில் "பொது வேட்பாளர் நகர்வு ஒன்றும் சரிவராது" – என்று தம்முடன் பேசிய பொதுத் தரப்புகளுக்கு பட்டவர்த்தனமாக – தெளி 06

# பெருந்தோட்ட மக்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் ஜனாதிபதியின் வேலைத்திட்டம் தொடர்கிறது

## அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு



”பெருந்தோட்ட மக்களின் உண்மையான சமூகமயமாக்கலுக்கு அவர்கள் அனைவருக்கும் நிரந்தர காணி உறுதி பத்திரங்களை வழங்குகின்றோம். வசிப்பிட உரிமையை இனி சலுகைப் பத்திரத்தில் மட்டுப்படுத்தாமல் இது சம்பந்தமான ஜனாதிபதியின் வேலைத் திட்டம் தொடர்கின்றது.”

– இவ்வாறு பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

தோட்ட மக்கள் வசிக்கும் வீடுகளுக்கு முழு உரிமை வழங்குவது தொடர்பாக நேற்றுமுன்தினம் கேகாலை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“சுமார் 200 வருட கால வரலாற்றைக் கொண்ட பெருந்தோட்ட மக்களே தமக்காக உரிமை இல்லாத காணிகளினால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தின் பிரகாரம் பெருந்தோட்ட மக்களுக்காக புதிய கிராமங்களை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தோட்டக் கம்பனிகள் அதற்கான காணிகளை ஒதுக்கீடு செய்து அரச தலையீட்டில் வீடுகள் நிர்மாணிக்கப்படும். சகல வசதிகளுடனும் கிராமங்கள் நிர்மாணிக்கப்படும். தோட்ட மக்களை உண்மையாவே சமூகமயப்படுத்துவதே இந்த வேலைத்திட்டத்தின் நோக்கமாகும்.” – என்றார்.




# தேர்தல் சட்டம் மீறப்பட்டமை தொடர்பில் 125 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள்!

தேர்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட 125 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நியமனம் வழங்குதல், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு வழங்குதல் ஆகியன இதற்குள் அடங்குகின்றன என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் தேர்தல் தொடர்பில் முறைப்பாடுகள் இருப்பின் தேர்தல்கள் ஆணைக்குழுவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முறைப்பாட்டுப் பிரிவில் அவற்றை முன்வைக்க முடியும் என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் காலப்பகுதியில் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, அரச சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துகின்றமை தொடர்பிலேயே கிடைக்கப்பெற்றுள்ளன என்று பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# ஜூலை மாதத்தில் மாத்திரம் 4 ஆயிரத்து 506 பேருக்கு டெங்கு



ஜூலை மாதத்தில் 4 ஆயிரத்து 506 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 32 ஆயிரத்து 745 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் அதிகளவானோர் மேல் மாகாணத்திலேயே பதிவாகியுள்ளனர். இதனிடையே, ஆண்டின் இதுவரையான காலப்பகுதிக்குள் 13 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன.


சிரேஷ்ட ஊடகவியலாளர் என்.வித்தியாதரனின் வழிகாட்டலில்
முதலாவது ஆண்டினை வெற்றிகரமாக கடந்து
இரண்டாவது ஆண்டில் முரசு !!
முரசு
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
முரசின் முதலாம் ஆண்டு நிறைவு !
1
தமிழ் ஊடகங்களில் புதிய பரிணாமம் !

# கைதான இரு இந்திய மீனவர்களும் வழக்கு எதும் இன்றி உடன் விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். நெடுந்தீவுக் கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் ஏற்பட்ட விபத்தின்போது கைதான இரண்டு இந்திய மீனவர்களும் வழக்கு நடவடிக்கைகள் ஏதும் இன்றி உடனடியாகவே விடுவிக்கப்படுகின்றனர்.

எல்லை தாண்டிய இந்தியப் படகை இலங்கைக் கடற்படையினர் சிறைப் பிடிக்க முயன்றபோது கடற்படையினரின் படகு மோதியதில் தமிழக மீனவர் ஒருவர் உயிரிழந்ததோடு மேலும் ஒருவர் காணாமல்போன சம்பவத்தில் இரு மீனவர்கள் கடற்படையினரால் உயிருடன் பிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட இரு மீனவர்களும் நேற்று ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இரு மீனவர்களும் எந்தவொரு சட்ட நடவடிக்கையும் இன்றி இன்று விடுவிக்கப்படும் அதேநேரம் உயிரிழந்த மீனவரின் சடலம் தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதன் உடற்கூற்றுப் பரிசோதனை இன்று இடம்பெறும் என்று வைத்தியசாலைத் தரப்புக்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவரின் பிரேத பரிசோதனைகள் இன்று முடிவுற்று நாளை சடலத்தை இந்தியாவுக்கு அனுப்பி வைக்கும்போது உயிருடன் பிடிக்கப்பட்ட இரு மீனவர்களையும் அனுப்பி வைக்கும் நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன.




இந்தச் சம்பவத்தில் காணாமல்போன நான்காவது மீனவர் இதுவரை மீட்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.



# மூத்த பத்திரிகையாளர் தில்லைக்கு கௌரவம்

அரை நூற்றாண்டுக்கும் மேலாக ஊடகப் பணியாற்றிவரும் மூத்த பத்திரிகையாளர் வடமராட்சி சின்னத்துரை தில்லைநாதனை கௌரவித்து கொழும்பில் புதனன்று பத்திரிகையாளர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் அவருக்கு வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் பொன்னாடை போர்த்தி கௌரவித்தபோது எடுத்தபடம்.

### மண் அகழ்வுக்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய

# இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் செயலாளரும் இணைப்பாளரும் கைது!

(கனகராசா சரவணன்)

**மட்டக்களப்பில் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதி வழங்க கட்டட ஒப்பந்தக்காரர் ஒருவரிடம் 15 இலட்சம் ரூபா இலஞ்சம் வாங்கிய இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரனின் செயலாளர் மற்றும் அவரது கட்சி இணைப்பாளர் ஆகிய இருவரையும் நேற்று கல்லடி கடற்கரையில் மாறுவேடத்தில்இருந்தஇலஞ்ச,ஊழல்ஒழிப்புஆணைக் குழுவினர் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**



பொலனறுவை பிரதேசத்தைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தக்காரர் செய்து வரும் கம்பனி ஒன்று மட்டக்களப்பு – பொலனறுவை எல்லைப் பகுதியான பிரதேசத்தில் உள்ள பகுதியில் 63 ஆயிரம் கீப் ஆற்று மண் அகழ்வதற்கான அனுமதியைப் பெறுவதற்காகக் கம்பனி உரிமையாளர், இராஜாங்க அமைச்சரின் மண்ணுக்குப் பொறுப்பான இணைப்பாளரை நாடியுள்ளார்.

இணைப்பாளர் இது தொடர்பாக அமைச்சரின் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து அவர்கள் இருவரும் இணைந்து அதற்கான அனுமதியை அமைச்சரிடம் பெற்றுத் தருவதாகவும், அதற்கு 15 இலட்சம் ரூபா இலஞ்சமாகத் தருமாறும் கோரியுள்ளனர்.

இந்தநிலையில், கட்டட ஒப்பந்தக்காரர் கொழும்பில் உள்ள இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவை நாடியதையடுத்து அவர்களின் ஆலோசனைக்கமைய ஆற்று மண் அனுமதிக்காக இலஞ்சம் கோரிய பணத்தைத் தருவதாக அமைச்சரின் இணைப்பாளர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு மேற்படி கட்டட ஒப்பந்தக்காரர் அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ தினமான நேற்று காலையில் மட்டக்களப்பு – கல்லடி கடற்கரையில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் மாறுவேடத்தில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அங்கு அமைச்சரின் செயலாளர் மற்றும் இணைப்பாளர் ஆகிய இருவரும் வாகனம் ஒன்றில் வந்தடைந்து அங்கு காத்திருந்த கட்டட ஒப்பந்தக்காரரிடம் இலஞ்சம் கோரிய பணத்தை வாங்கும்போது அங்கு மாறுவேடத்தில் இருந்த இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் அவர்களைச் சுற்றிவளைத்து கைது செய்ததுடன் 15 இலட்சம் ரூபா பணத்தையும் கைப்பற்றினர்.

கைது செய்த இருவரையும் பொலனறுவை பொலிஸ் தலைமையத்துக்குக் கொண்டு சென்று விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி கொழும்புக்கு அழைத்துச் செல்ல இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் சகோதரனும், அவரின் முன்னாள் செயலாளரும் கடந்த 2022ஆம் ஆண்டு காணி விவகாரத்துக்காக ஒருவரிடம் மட்டக்களப்பு நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து 15 இலட்சம் ரூபாவை இலஞ்சமாக வாங்கிய நிலையில் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம், கிளிநொச்சிக்கு உடனே நிரந்தர அரச அதிபர்களை நியமிக்கவும்

## இன்று வடக்கு வரும் ரணிலுக்கு அவசர கடிதம் அனுப்பிய விக்கி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர அரச அதிபர்களை உடனடியாக நியமிக்குமாறு கோரிய அவசர கடிதம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நிரந்தர அரச அதிபர்களின் நியமனம் தொடர்பில் ஏற்கனவே விக்னேஸ்வரன் எம்.பியால் ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியபோதும் அதனை நிறைவேற்றாது தரம் போதாமை காரணமாகப் பதில் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே, நிரந்தர அரச அதிபர்களை நியமிக்குமாறு கோரியே இந்த அவசர கடிதம் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டாவது தடவையாகவும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இன்று முதல் 3 நாள் பயணமாக வடக்கே வரும் ஜனாதிபதியிடம் மேலும் பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கோரிக்கை முன்வைக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## இரகசியம் பரகசியம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாக – எடுத்துரைத்து மகிழ்வும் அத்தரப்புகள் தவறவில்லை.

'கருத்து ஒன்று, செயல் வேறொன்று' என்ற தங்கள் போக்கை அவர்கள் நிரூபித்து நின்றார்கள்.

இந்தத் தலைவர்களில் ஒருவர் பொது வேட்பாளர் நகர்வை முன்னின்று நகர்த்தும் பத்தி எழுத்தாளர் ஒருவருடன் தொலைபேசியில் பேசினாராம்.

"தமிழரசிலிருந்து முக்கிய பிரமுகர்களும் வந்து சேர்வார்கள் என்று நீங்கள் கூறிய உறுதி மொழியை நம்பித்தான் பொது வேட்பாளருக்கான பொது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டோம். ஆனால் அப்படி யாரும் அந்தப் பக்கத்திலிருந்து வருபவர்களாகத் தெரியவில்லை. அவர்கள் வராவிட்டால் நாமும் விலகி விடுவோம்." – என்று அச்சுறுத்தல் விடுத்தாராம் அவர்.

"இல்லை.. இல்லை, அவசரப்படாதீர்கள். அவர்கள் வருவார்கள், வருவார்கள்" – எனக்கூறி சமாளித்தாராம் அந்த ஏற்பாட்டாளர்.

எனக்கு என்னவோ வழமை போல 'செல்லும் செல்லாததற்கெல்லாம் செட்டியார் இருப்பது மாதிரி' கடைசியில் 'ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர் புகழ்' சிவாஜிலிங்கதிடம்தான் இவர்கள் எல்லோரும் சரணாகதி அடைய வேண்டி இருக்கும் போல எனக்குத் தோன்றுகின்றது.

\+ + +

நேற்று முன்தினம் தமிழரசு யாழ். மாவட்ட எம்.பியான சுமந்திரனை மொட்டுக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தமது விஜயராம இல்லத்துக்கு அழைத்து இரவு விருந்து அளித்து கலந்துரையாடி இருக்கின்றார்.

நானும் அதே மஹிந்த ராஜபக்ஷவை கடந்த வாரம் சந்தித்து விட்டு வந்து குறிப்பிட்ட அதே அனுபவங்கள்தான் சுமந்திரனுக்கும்.

வயது, ஆயாசம் காரணமாக பெரிதும் தளர்ந்திருக்கின்றார் மஹிந்தர்.

மொட்டுக் கட்சிக்கு வாக்குச் சுவீகரிக்கும்–வசீகரிக்கும்–முகம்அவருடையதுஎன்றாலும், கட்சியின் 'மூளை' இப்போது அவருடையதல்ல. அது சுமந்திரனுக்கும் புரிந்திருக்கும் என்றே தோன்றுகின்றது.

மொட்டுக் கட்சியில் சத்தமின்றி ஏற்பட்டுள்ள ஒரு மாற்றத்தை எல்லோரும் அவதானித்தார்களோ என்னவோ தெரியவில்லை. இதுவரை காலமும் மஹிந்தர், பஸில், சமல் மற்றும் மூத்த தலைவர்கள் என்று பல முன்னிலைப் பேச்சாளர்கள்,முகங்கள் இருந்தனர். அவர்களுடன் ஒப்பிடுகையில் கட்சியின் ஜூனியர் தலைவராகத்தான் நாமல் ராஜபக்ஷ இருந்தார்.

இப்போது ஜனாதிபதித் தேர்தலில் தனி வழி போகும் முடிவை மொட்டுக் கட்சி எடுத்த பின்னர், கட்சியின் பிரதான குரல் – பிரதான தலைவர் – பேச்சாளர் – நாமல் ராஜபக்ஷதான்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தனிவழி போகும் முடிவை கட்சி எடுத்தமையோடு, கட்சியின் மூத்த தலைவராகி விட்டார் நாமல். வாரிசு அரசியலுக்கான காய் நகர்த்தல் கனகச்சிதமாக அரங்கேறுகின்றது. ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளர் பிரச்சினையைக் காட்டி, பல சீனியர் தலைவர்களை ரணில் பக்கம் தள்ளி, கட்சியை கனகச்சிதமாக நாமலிடம் ஒப்படைக்கும் கைங்கரியம் ஒப்பேறியிருக்கின்றது என்பது அவதானிக்க தக்கது.

\+ + +

நேற்று முன்தினம் இரவு மஹிந்த ராஜபக்ஷடன் இரவு விருந்துண்ட சுமந்திரன், நேற்று பிற்பகல் ஜனாதிபதி ரணிலுடன் அரசியல் பேச்சு நடத்தினார் அல்லவா?

அச்சமயம், தற்போது சர்ச்சைக்கு உள்ளாகி இருக்கும் பொலிஸ் மா அதிபர் நியமனம் குறித்தும் சுமந்திரனுடன் விரிவாகப் பேசியிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இவ்விடங்களில் சட்டப் புலமையும் சட்ட ஞானமும் மிக்க சுமந்திரனின் கருத்தையும் ஆலோசனையையும் செவிமடுத்தார் ஜனாதிபதி என்று தெரிகின்றது.

சுமந்திரன் கொடுத்த ஆலோசனை என்ன, அதற்கு ஜனாதிபதியின் பிரதிபலிப்பு யாது –? அவை பற்றி நாளை பார்ப்போமா வாசகர்களே...!

## இதுவரை 10 வேட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

10 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ அறிவிப்பைத் தேர்தல்கள் ஆணைக்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி வெளியிட்டது.

புதிய ஜனநாயக முன்னணி சார்பில் போட்டியிடுவதற்கு ஒசல ஹேரத்தும், இலங்கைத் தொழிலாளர் கட்சி சார்பில் ஏ.எஸ்.பி.லியகேவும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் சஜித் பிரேமதாஸவும், தேசிய அபிவிருத்தி முன்னணி சார்பில் எஸ்.கே.பண்டாரநாயக்கவும், தேசிய ஜன நாயக முன்னணி சார்பில் விஜயதாஸ ராஜபக்ஷவும், ஐக்கிய சோஷலிசக் கட்சி சார்பில் சிறிதுங்க ஜயசூரியவும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் என்ற ரீதியில் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

அதேவேளை, அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சி என்ற பிரிவில் ருஹுணு மக்கள் முன்னணி சார்பில் அஜந்த த சொய்ஸா கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

மேலும், சுயேச்சையாகப் போட்டியிடும் வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்க, சரத் கீர்த்தி ரத்ன,கே.கே.பியதாஸ ஆகியோர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இவர்களில் விஜயதாஸ ராஜபக்ஷ, கே.கே.பியதாஸ, சிறிதுங்க ஜயசூரிய மற்றும் அஜந்த த சொய்ஸா ஆகியோர் நேற்று முன்தினம் கட்டுப்பணம் செலுத்தினர் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான கட்டுப்பணத்தைச் செலுத்துவதற்கு எதிர்வரும் மாதம் 14 ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பாளர் 50 ஆயிரம் ரூபாவும், சுயாதீன வேட்பாளர் 75 ஆயிரம் ரூபாவும் கட்டுப்பணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

## மாயமான இந்திய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

விக்கிரமசூரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"நேற்றைய தினம் நெடுந்தீவுக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய இழுவைமடிப் படகை எமது கடற்படை கைது செய்ய முற்பட்டது.

இதன்போது இந்திய மீனவர்கள் கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க முற்பட்டனர். தொடர்ந்து ஏற்பட்ட விபத்தின் காரணமாக இந்திய இழுவைமடிப் படகு கடலினுள் மூழ்கியது.

உடனடியாக 3 மீனவர்கள் மீட்கப்பட்ட போதிலும் ஒருவர் கடலினுள் மாயமானார். மீட்கபட்ட மூவரில் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் புங்குடுதீவு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்நிலையில், இந்திய – இலங்கை கடற்படை இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்ட போதிலும் மாயமான மீனவரை மீட்க முடியவில்லை. தொடர்ந்து இன்றைய தினம் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்." – என்றார்.

## ரணில் - சுமந்திரன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் கொழும்பில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

இருவரும் பேசி இணக்கம் கண்ட ஏற்பாடுகளின்படி –

\+ மாகாண சபைத் தேர்தல் சட்டமூலம் உடனடியாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வந்து நிறைவேற்றப்படும். இது தொடர்பில் சுமந்திரன் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பித்துத் தயாராக இருக்கும் சட்டமூலம் வரும் ஓகஸ்ட் 22, 23ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

\+ சுமந்திரன் சமர்ப்பித்துள்ள தனிநபர் சட்டமூலம் ஏற்கனவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு, உயர் நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கு தயாரான நிலையில் உள்ளது. அந்தச் சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டி உள்ள சில திருத்தங்களுடன் அதனை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வந்து நிறைவேற்றினால் ஜனாதிபதித் தேர்தல் முடிந்த கையோடு மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது.

மாகாண சபைகளில் இளைஞர், யுவதிகளுக்கு போதிய பிரதிநிதித்துவம் வழங்குவதை உறுதிப்படுத்தல், எம்.பிக்களும் அப்பதவியில் இருந்து கொண்டே மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட வகை செய்தல் ஆகிய திருத்தங்கள் இந்தச் சட்டமூலத்துக்குச் செய்யப்பட வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார். சட்டமூலத்தின் குழு நிலை விவாதத்தின்போது சட்டமா அதிபரின் இணக்கத்துடன் அந்த மாற்றங்களைக் கொண்டுவர முயற்சிக்கலாம் என சுமந்திரன் எம்.பி. கூறியமையை ஜனாதிபதி ரணில் ஏற்றுக்கொண்டார்.

தாம் சமர்ப்பித்துள்ள மாகாண சபைகள் தேர்தல் சட்டமூலத்தை வரும் 22, 23 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் எடுத்து விவாதிப்பதற்கு அதனை நாடாளுமன்ற நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளுமாறு தாம் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்தை கடிதம் மூலம் கோரியுள்ளார் என்றும், அது இன்று நாடாளுமன்ற விவகாரங்களை ஆராயும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட இருப்பதாகவும், அதற்கு அரசுத் தரப்பில் ஆதரவு கிட்டினால் விடயத்தை அந்தத் திகதியில் எடுத்து சட்டமூலத்தை நிறைவேற்ற முடியும் என்றும் சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

அதற்கான வழிகாட்டுதல்களை சபை முதல்வர் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கும், அரசு தரப்பின் பிரதம கொறடா பிரசன்ன ரணதுங்கவுக்கும் தாம் வழங்குவார் என ஜனாதிபதி உறுதியளித்தார்.

அதன் பிரகாரம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு வழி செய்யும் சுமந்திரனின் தனிநபர் சட்ட மூலம் எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படுமா என்பது குறித்து சபாநாயகர் தலைமையில்

07

# உண்மையான பொது வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி ரணிலே

## தமிழ்ப் பொது வேட்பாளர் தேவையற்றது என்கிறார் எமில்காந்தன்




(கே.வசந்தன்)

"நாட்டின் உண்மையான பொது வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான். வடக்கு – கிழக்கு சார்ந்த பொது வேட்பாளர் தமிழ் மக்களைத் தோல்விப் பாதையில் கொண்டு செல்லும்." – என்று ஐக்கிய மக்கள் கட்சி கூட்டணியின் வன்னி மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அ.எமில்காந்தன் தெரிவித்தார்.

வவுனியா ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அமைச்சர் டிலான் அலஸ்ஸுடைய ஐக்கிய மக்கள் கட்சியின் ஊடாகப் பல சிதறிய கட்சிகளையும் சேர்த்து வன்னி, நுவரெலியா உள்ளிட்ட பல மாவட்டங்களில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்திருந்தோம்.

தற்போது தமிழ் மக்களுடைய அரசியல் பயணம் பின்னோக்கிய நிலையில் உள்ளது. பாரம்பரிய அரசியல் கட்சிகளைக் கொண்ட தமிழ் மக்கள் தற்போது எந்தக் கட்சியை, யாரை ஆதரிப்பது என்ற நிலையில் உள்ளனர்.

எங்களுடைய மக்களுக்குக் காத்திரமான ஒரு அரசியல் கட்டமைப்பை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில் பல வேட்பாளர்கள் களமிறங்கியுள்ளார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவும் ஒரு பொது வேட்பாளராகக் களமிறங்குகின்றார். இந்த நாட்டுக்கு அவர் ஆற்றிய சேவை காரணமாக அவர் பொது வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் அவர் பெரியதொரு பொறுப்பை எடுத்து இந்த நாட்டை மீட்டுள்ளார். அந்த அடிப்படையில் என் சார்ந்த கட்சிகளுடைய ஆதரவும், ஐக்கிய மக்கள் கட்சியின் ஆதரவும் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்குத்தான்.

ரணில் விக்கிரமசிங்கவைத்தான் நாம் ஆதரிப்போம். நாட்டின் பொருளாதாரம், கட்டமைப்பு, சவாலான நேரத்தில் நாட்டை வழிநடத்தியவர் அவரே. அரசியலில் நீண்ட காலம் அனுபவம் கொண்ட ஒருவராக அவர் உள்ளார். இதனால் தற்போதைய ஜனாதிபதியைத்தான் நாம் ஆதரிக்க வேண்டும். அவர்தான் இந்த நாட்டின் உண்மையான பொது வேட்பாளர்.

இந்த நேரத்தில் தமிழ் மக்கள் வரும் ஜனாதிபதித் தேர்தலை எப்படிப் பார்க்க வேண்டும் என்ற செயற்றிட்டங்களைச் செய்யத் தீர்மானித்துள்ளோம். வடக்கு – கிழக்கில் தமிழ் பொது வேட்பாளர் என்று ஒரு விடயத்தைப் பேசுபொருளாக்கி அதற்கு ஒரு வேட்பாளரை தேடிக் கொண்டிக்கின்றார்கள். தமிழ்த் தேசியம் என்ற அடிப்படையில் பொது வேட்பாளரை நிறுத்துவார்களாக இருந்தால் அது தமிழ் மக்களைத் தோல்விப் பாதையில் கொண்டு செல்லும். அவர்கள் பிழையாக மக்களை வழிநடத்துகின்றார்கள் என்றுதான் அர்த்தம்.

வடக்கு – கிழக்கை மட்டும் வைத்து வேட்பாளரை நிறுத்துவார்களாக இருந்தால் அந்த வேட்பாளர் வெல்லப்போதில்லை. அதைத் தெரிந்திருந்தும் அரசியல் கட்சிகள் தமது கடமையை விட்டு தவறாக வழிநடத்துகின்றார்கள். அரசியல் கட்சிகள் மக்களைச் சரியான வழியில் வழிநடத்த வேண்டும்.

காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் என்பது தொடர்ந்து பேசப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொடர்ந்தும் அதே விடயத்தைப் பேசிக் கொண்டிருக்க முடியாது. அதனைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அரசியல் கட்சிகளின் கடமை. நாட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரம் உண்டு. அது பற்றிப் பேசுவதை விடுத்து தற்போதைய நாட்டு மக்களும், எதிர்கால சந்ததியும் சிறப்பாக வாழ வேண்டுமெனில் ஒரே தெரிவு தற்போதைய ஜனாதிபதி ரணில்தான்." – என்றார்.

### ரணில் - சுமந்திரன்...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

+ 13ஆம் திருத்தத்தில் இருக்கும் காணி அதிகாரப் பகிர்வை மாகாண சபைகள் உடனடியாக பிரயோகிப்பதற்குத் தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட வேண்டும். தேசிய காணி ஆணைக்குழுவுக்கான கட்டமைப்பு தயாராக இருப்பதாகவும், அது உடனடியாக வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்படுவதற்கு காலதாமதம் இன்றி நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தச் சந்திப்பின் போது உறுதி கூறினார். தேசிய காணி ஆணைக்குழு நிறுவப்பட்டு காணிகள் தொடர்பான தேசிய கொள்கைகள் வகுக்கப்பட்டால், காணிகள் நேரடியாக மாகாண நிர்வாகத்தின் கீழ் வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

+ உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவும் உடனடியாக நிறுவப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

+ அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் மூலம் மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட பல அதிகாரங்கள் காலத்துக்குக் காலம் மீளப் பெறப்பட்டுள்ளன. அவை அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மாகாணங்களுக்கு மீளப் பகிரும் ஏற்பாடுகள் எந்தத் தாமதமுமின்றி உடனடியாகவே மேற்கொள்ளப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்தார்.

+ 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பொலிஸ் அதிகாரப் பகிர்வு உள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் எல்லாத் தரப்புகளுடனும் பேசி, இணக்கம் கண்டு, அதைச் சுமுகமாக முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறினார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ரணிலும் வாக்குறுதியும்

தேர்தல் என்றதும் வாக்குறுதிகளை அள்ளி வீசுவதும், பின்னர் அவை காற்றில் கரைந்து காணாமல் போவதும் இலங்கை மக்களுக்கு சர்வ சாதாரணம். அதுவும் தமிழர்களுக்கு, அவர்கள் அரசியலில் கண்டவை அவைதான். வாக்குறுதிகளும் அவை காற்றில் மறைந்த கதைகளும்தான்.

இப்போது இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் உற்சவ காலம். வழமைக்கு மாறாக இம்முறை பிரதான கட்சிகளின் நான்கு வேட்பாளர்கள் களமிறங்கப் போகின்றார்கள்.

இந்த நான்கு வேட்பாளர்களில் யார் வெல்வார்கள் என்பதை முக்கூட்டியே ஊகிக்க முடியாத அளவுக்கு கடும் போட்டி.

எந்த வேட்பாளரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளை பெற மாட்டார்கள் என்பது பெரும்பாலும் நிச்சயம். அதனால் இரண்டாவது, மூன்றாவது தேர்வு பற்றிய வாக்கு எண்ணிக்கையின் பின்னரே தேர்தல் முடிவு நிச்சயமாகும் என்ற களநிலைமை.

அவ்வளவு நெருக்கமான போட்டி இருக்கின்றமையால் எப்படியும் வாக்காளர்களைக் கவர்ந்து விட வேண்டும் என்பதில் துடியாய்த் துடிக்கின்றன தரப்புகள்.

வழக்கமாக வாக்குகளை அள்ளுவதற்கு பேரினவாதத்தைக் கிளப்பி நிற்கும் தென்னிலங்கை பௌத்த - சிங்களத் தீவிரவாத சக்திகளுக்கு இப்போது போட்டி கழுத்தளவு நெருக்கம் என்பதால் சிறுபான்மையினரின் வாக்குகளை வளைத்துப் போடுவதும் தவிர்க்க முடியாத கட்டாயமாகி, அதன் காரணமாகப் பேரினவாதத்தைச் சற்றுக் கைவிட்டு விலகி நிற்கும் நிலைமை.

அதனால் சிறுபான்மையினருக்கு - குறிப்பாக தமிழர்களுக்கு - வாக்குறுதிகள் தாராளமாக வீசப்படுகின்றன. பிரதான வேட்பாளர்கள் எல்லோருமே தத்தமது அளவில் வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர்.

இந்த வாக்குறுதிப் 'பாய்ச்சா' தமிழர்களிடம் இனி இலகுவில் வேகாது என்பது தான் உண்மை நிலைமை. வெற்றுவேட்டு வாக்குறுதிகளை காலம் காலமாகக் கேட்டு சலித்துக் களைத்துப் போனவர்கள் தமிழர்கள். அவர்கள் வாய்ச்சவடால் வாக்குறுதிகளுக்கு இனிமேல் இலகுவில் எடுபட கூடியவர்கள் அல்லர்.

'ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்கள் சகலருடனும் தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு குறித்துப்பேசிப்பார்ப்போம். அவற்றின் அடிப்படையில் யாருக்கு வாக்களிப்பது என்பதை நம் மக்களுக்கு எடுத்துரைப்போம்' - என்று தமிழர் தரப்பின் பிரதான கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சி தெரிவித்துள்ளது.

இப்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்கள் சகலருடனும் நாம் பேசலாம். பேச வேண்டும். பேசுவது சிறந்தது. அவர்கள் எல்லோரும் எமது வாக்குகளை தாங்கள் சுவீகரித்துக் கொள்வதற்காக வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். கடைசியில் எம்மை ஏமாற்றுவார்கள் என்பது உறுதி என்று தமிழர் தரப்பு கருதாமல் இல்லை.

தென்னிலங்கை வேட்பாளர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர ஏனையோர் வாக்குறுதிகளைத் தாராளமாக அள்ளி வீசலாம். பதவிக்கு வந்தால்தான் அவற்றை நடைமுறைப்படுத்த வேண்டிய இக்கட்டு அவர்களுக்கு வரும். அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்ற இறுமாப்பில் அவர்கள் எத்தகைய வாக்குறுதிகளையும் அள்ளி வீச முடியும். அவர்களுடன் பேசும்போது இந்த அடிப்படை அம்சத்தை தமிழ் தலைவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால், பதவியில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிலைமை அதுவல்ல. அவர் இப்போது ஜனாதிபதி. நிறைவேற்றதிகாரத்தைக் கைவசம் வைத்திருப்பவர். அடுத்த தடவை ஜனாதிபதியாக வந்த பின்னர் தாம் நிறைவேற்றுவார் என இப்போது அவர் அளிக்கக்கூடிய - கூறக்கூடிய - வாக்குறுதிகளின் பூர்வாங்க விடயங்களை அவர் இப்போதே செயல்படுத்த முடியும். செயல்படுத்த வேண்டும்.

இந்த வியூகத்தை வளைத்துத்தான் இப்போது அவருடன் நிபந்தனைப் பேச்சுக்களை நடத்துகின்றார் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்.

தாம் அளிக்கும் வாக்குறுதிகளின் பூர்வாங்க ஆயத்தங்களை இப்போது அவர் செயலில் செய்து காட்டினால் தான் அவரை ஆதரிப்பது குறித்து தமிழர்கள் சிந்திக்க முடியும்.





### இலங்கைக் கடற்படையின் படகு மோதியதில்

# உயிரிழந்தவரின் உடலைத் தாயகம் கொண்டுவர நடவடிக்கை எடுங்கள்!

## ஜெய்சங்கருக்கு ஸ்டாலின் கடிதம்

இலங்கைக் கடற்படை படகு மோதியதில் இறந்த மீனவர் உடலை உடனடியாக தாயகம் கொண்டுவரவும், காயமடைந்தவர்களை தமிழகம் அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் ராமேஸ்வரத்தில் இருந்து விசைப்படகில் சென்று நெடுந்தீவு அருகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படை ரோந்துப் படகு மோதியது. இதில் படகு சேதமடைந்ததால், மலைச்சாமி (59) என்ற மீனவர் கடலில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக இரங்கல் தெரிவித்திருந்த முதல்வர் மு.க.ஸ்டாலின், மலைச்சாமி குடும்பத்தினருக்கு முதல்வர் நிவாண நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா வழங்க உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில், மத்திய அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது–

ஜுலை 31 ஆம் திகதி இந்திய மீன்பிடிப் படகின் மீது இலங்கை கடற்படை ரோந்துப் படகு மோதிய சம்பவத்தில் ஒரு மீனவர் உயிரிழந்துள்ளார். இருவர் காயமடைந்துள்ளனர். மேலும், ஒரு மீனவரை காணவில்லை. இது போன்ற நிகழ்வுகளில் இந்திய மீனவர்கள் உயிரிழப்பது இதயத்தை நொறுக்குவதாகவும், ஏற்றுக் கொள்ள முடியாததாகவும் உள்ளது.

இந்தச் சம்பவம் மீனவ சமூகத்தினரை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. இந்த விவகாரத்தை இலங்கை அதிகாரிகளின் கவனத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும். உயிரிழந்த மீனவர் மலைச்சாமியின் உடலை இந்தியாவுக்குக் கொண்டு வர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்தச் சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டுள்ளதுடன், இரண்டு மீனவர்கள் காயமடைந்துள்ளனர். இலங்கை அதிகாரிகளின் வசம் இரண்டு மீனவர்கள் உள்ளனர். அவர்களுக்குத் தேவையான தூதரக உதவிகளையும், போதிய மருத்துவ வசதிகளையும் வழங்க வேண்டும். அவர்களை மிக விரைவில் தமிழகம் அழைத்து வர உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

நமது பாரம்பரிய மீன் பிடிப்புப் பகுதிகளில் இலங்கைக் கடற்படையினர் அடிக்கடி மேற்கொள்ளும் இதுபோன்ற அத்துமீறல்கள், மீனவ சமூகத்தினரிடையே அச்சத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

நடைபெற்றுள்ள இந்தச் சம்பவம், தமிழ்நாட்டின் பாரம்பரிய மீன்பிடிப் பகுதியான பாக் வளைகுடா பகுதியில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதைத் தடுக்கும் வகையில் உள்ளது.

இதனைக் கடந்த காலங்களில் பலமுறை தங்களின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளேன். எனவே, இந்த விடயத்துக்கு அதிகபட்ச முன்னுரிமை அளித்து, தூதரக நடவடிக்கையின் மூலம் உரிய தீர்வு காணப்படும் என நான் நம்புகிறேன்.– என்றுள்ளது.

# வயநாட்டில் நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு புதுச்சேரி சட்டப் பேரவையில் இரங்கல் தெரிவிப்பு

வயநாட்டில் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தோருக்கு புதுச்சேரி சட்டப் பேரவையில் நேற்று வியாழக்கிழமை இரங்கல் தெரிவிக்கப்பட்டதுடன் 2 நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

புதுச்சேரி 15 ஆவது சட்டப் பேரவையின் 5 ஆவது கூட்டத் தொடரின் இரண்டாம் நாளான நேற்றுக் காலை சட்டப் பேரவை தலைவர் செல்வம் திருக்குறள் வாசித்து சபையைத் தொடங்கினார்.

தொடக்கத்தில் புதுச்சேரி பாஜகவின் முதல் எம்எல்ஏ–வான கிருஷ்ணமூர்த்தி, அதிமுகவை சேர்ந்த முன்னாள் எம்எல்ஏயான அன்பழகன் ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து கேரளத்தில் வயநாட்டில் நிலசரிவில் சிக்கி உயிரிழந்தோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 2 நிமிடம் மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

பின்னர், வயநாடு நிலச்சரிவில் உயிரிழந்தவர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்து அம்மாநில முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ள ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் எம்எல்ஏ கேஎஸ்பி ரமேஷ் தனது ஒரு மாத சம்பளமான 48,500 ரூபாவை கேரள முதல்வர் பேரிடர் நிவாரண நிதிக்கு வழங்குவதாக கடிதம் அனுப்பியுள்ளார்.

அதேபோல் முன்னாள் எம்எல்ஏவும் அதிமுக மாநில துணைச் செயலருமான வையாபுரி மணிகண்டன் 25 ஆயிரம் ரூபா அனுப்பியுள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கையில், புதுச்சேரி அரசு சார்பில் கேரளத்துக்கு நிவாரண உதவி தரவேண்டும். புதுச்சேரி எம்எல்ஏக்கள், எம்பிக்கள், அரசியல் கட்சியினர், பொது மக்கள் இத்துயரத்தில் பங்கேற்று உதவ வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# பழிவாங்குதலை பிரகடனப்படுத்தும் சிவப்புக் கொடியை பறக்கவிட்ட ஈரான்

பழிவாங்குதலை பிரகடனப்படுத்துகின்ற சிவப்புக் கொடியை ஈரானிலுள்ள ஜம்கறாம் பள்ளிவாசலில் பறக்க விட்டுள்ளது ஈரான்.

உலகிலுள்ள பிரபல்யமான மதஸ்தலங்களுள் ஒன்றான ஜமகறாம் பள்ளிவாசலில் சிவப்புகொடியைப் பறக்கவிடுவது என்பது, இரத்தம் சிந்தப்படுவதற்கான அடையாளமாகவும், இரத்தப் பழியைத் தீர்பதற்கான ஒரு அடையாளமுமாகவே நீண்ட காலமாகப் பார்க்கப்பட்டுவருகின்றது.

அந்த வகையில், 'ஹமாஸ் தலைவர் இஸ்மயில் ஹணியே ஈரான் தலைநகர் டெகரானில் வைத்து இஸ்ரேலியத் தாக்குதலில் கொல்லப்பட்டதற்கு இஸ்ரேல் மீது கடுமையான பதில் தாக்குதல் மேற்கொள்ளப்படும்' என்பதற்கான அடையாளமாகவே, ஜம்கறாம் பள்ளிவாசலில் சிவப்புக் கொடி பறக்கவிடப்பட்டுள்ளது என்று கூறப்படுகிறது.

இஸ்ரேல் மீதான பதில் தாக்குதல் பற்றி ஈரானில் இருந்தும், ஈரானின் துணை இராணுவக் குழுக்களிடம் இருந்தும் வெளிப்படுகின்ற எச்சரிக்கைகளும், பிரகடனங்களும், ஒரு மிகப் பெரிய யுத்தம் மத்திய கிழக்கில் மூழப் போகின்றது என்பதை கட்டியம் கூறுவதாகவே இருக்கின்றது.



# ஹனியாவின் இரத்தம் நிச்சயம் வீண் போகாது!

## ஈரானின் வெளியுறவு துறை அமைச்சகம் அறிவிப்பு

சர்வதேச அரசியலில் எப்போதுமே பதற்றமான பிராந்தியமான மத்திய கிழக்கில் அண்மைய நிகழ்வுகள் நிலைமை மேலும் மோசமாக்கியுள்ளன.

ஈரானில் ஹமாஸின் உயர்மட்ட அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே தலைநகர் டெஹ்ரானில் அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார்.

ஈரானில் உச்ச அதிகாரம் பெற்ற அதிஉயர் தலைவர் ஆயதுல்லா அலி காமனேயி, 'ஹனியே கொலைக்கு பழி வாங்க வேண்டியது டெஹ்ரானின் கடமை' என்று கூறியுள்ளார்.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையே போர்நிறுத்த பேச்சு நடத்தி வரும் கத்தார், "ஹனியே மரணம் பேச்சுவார்த்தையை ஆபத்தான சூழலுக்கு இட்டுச்செல்லும். பேச்சுவார்த்தையில் ஹனியே முக்கிய பங்காற்றி வந்தார்" என தெரிவித்துள்ளது.

'ஹனியேவை கோழைத்தனமாக கொலை செய்தமைக்காக இஸ்ரேல் நிச்சயம் வருத்தப்படும்' என்று ஈரான் ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியன் கூறியுள்ளார்.

ஈரான் தனது பிராந்தியத்திற்கான ஒருமைப்பாடு, பெருமை மற்றும் கண்ணியத்தை பாதுகாக்கும் என்று கூறியுள்ளார்.

ஈரானின் வெளியுறவு துறை அமைச்சக அதிகாரப்பூர்வ இணையதளத்தில், 'ஹனியாவின் இரத்தம் நிச்சயம் வீண் போகாது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

'நிச்சயம் இந்த கொலை குறித்து விசாரணை மேற்கொள்ளப்படும். இந்த மரணம் ஈரான் – பாலத்தீன் இடையிலான ஆழமான மற்றும் பிரிக்க முடியாத பிணைப்பை மேலும் வலிமையாக்கும்' என்று ஈரான் தெரிவித்துள்ளது.

அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் லாயிட் ஆஸ்டின், "மத்திய கிழக்கு பிராந்தியத்தில் பெரிய அளவில் மோதல் வெடிக்காது" என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறவுத் துறை செயலாளர் ஆண்டனி பளிங்கென் இது குறித்துப் பேசுகையில், ' நடந்த நிகழ்வு குறித்து நான் எதுவும் ஊகிக்க விரும்பவில்லை. ஆனால், போர் நிறுத்தம் கொண்டுவர தொடர்ந்து அழுத்தம் தரப்பட வேண்டும்' என்றார்.

ஹமாஸின் எல்லை தாண்டிய தாக்குதலின் விளைவாக, காஸாவில் உள்ள குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என பாலஸ்தீனர்கள் ஒவ்வொரு நாளும் மோசமான வகையில் பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனக் கூறியுள்ளார்.

இஸ்மாயில் ஹனியே , ஹமாஸ் அமைப்பின் அரசியல் தலைவர், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மோதல்களைத் தீர்ப்பதற்கு மத்தியஸ்தராக பெரும் பங்காற்றியவர் என மிதவாத விமர்சகர்களால் பாராட்டப்பட்டார்.

அத்தகைய தலைவர் ஈரான் தலைநகரில் சிறப்பு இராஜதந்திர நிகழ்வின் போது படுகொலை செய்யப்பட்டிருப்பது ஈரானைப் போருக்கு இணைக்கும் மிகவும் தீவிரமான முயற்சி என்று விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

இந்தக் கொலைக்குச் சீனா, ரஷ்யா உள்ளிட்ட பல சக்தி வாய்ந்த நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தேர்தலுக்கு பொலிஸாரால் எவ்வித இடையூறும் இல்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவிப்பு

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குப் பொலிஸாரால் எவ்வித இடையூறும் ஏற்படமாட்டாது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தேர்தலை நடத்துவதற்குத் தேவையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பொலிஸ் அதிகாரிகளைத் தேவைக்கேற்ப கடமையில் ஈடுபடுத்துமாறு தேர்தல் நடவடிக்கைக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்குக் கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு முன்னர் நடைபெற்ற தேர்தல்களில் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளைப் போன்று இம்முறையும் முறையான விதத்தில் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காகப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# காஸா சிறுவர் நிதியத்துக்கு பங்களிப்பு சந்தர்ப்பம் நிறைவு

பலஸ்தீனத்தின் காஸா பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நிலைமை காரணமாக இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கு அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின்படி ஸ்தாபிக்கப்பட்ட காஸா சிறுவர் நிதியத்துக்குப் பங்களிப்பதற்கான அவகாசம் 2024 ஜுலை 31ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

கடந்த ரமழான் நோன்பு மாதத்தில் இந்த நிதிக்குப் பங்களிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொதுமக்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க நாடளாவிய ரீதியில் பெருந்தொகையான மக்கள் இன, மத பேதமின்றி இதனுடன் கைகோர்த்தனர்.

இந்த நிதியத்துக்குப் பங்களிக்கச் சந்தர்ப்பம் வழங்குமாறு மக்களிடம் இருந்து முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய, 2024 மே மாதம் 31 ஆம் திகதி வரை கால அவகாசம் நீடிக்கப்பட்டது.

நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்வதற்கான அவகாசம் மே 31 ஆம் திகதியுடன் முடிவடைந்தாலும், நன்கொடையாளர்கள் இந்த நிதியத்துக்குத் தொடர்ந்து பணம் வைப்புச் செய்வது அவதானிக்கப்பட்டது. இந்த நிதியத்துக்குத் தொடந்தும் பணம் வைப்புச் செய்ய வேண்டாம் என்று ஜனாதிபதி அலுவலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

2024 ஜுலை 31 ஆம் திகதிக்குப் பின்னர் ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கில் ஏதேனும் வைப்புத்தொகை நேரடியாகச் செலுத்தப்பட்டால், அந்தத் தொகை சமூக நலன்புரித் திட்டங்கள் மேற்கொள்வதற்காக ஜனாதிபதி நிதியில் வரவு வைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, இவ்வருடம் இப்தார் நோன்பு துறக்கும் நிகழ்வுகளுக்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் ஒதுக்கிய நிதி ஒதுக்கீட்டில் இருந்து பெறப்பட்ட ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐக்கிய நாடுகள் சபையின் உத்தியோகபூர்வ முகவரகத்தின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பலஸ்தீன அரசிடம் கையளித்தார்.

2024 ஜுலை 31ஆம் திகதி வரை பெறப்பட்ட அனைத்து நன்கொடைகளும் எதிர்வரும் நாட்களில் பலஸ்தீன அரசிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படும்.

இதேவேளை, இந்த நிதியத்துடன் மனிதாபிமான ரீதியில் கைகோர்த்த அனைத்து மக்களுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜனாதிபதி அலுவலகம் நன்றிகளைத் தெரிவித்துள்ளன.



# தினேஷின் கட்சியும் ரணிலுக்கு ஆதரவு

## மத்திய குழு நேற்று தீர்மானம்

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்கப் பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி தீர்மானித்துள்ளது.

மக்கள் ஐக்கிய முன்னணியின் மத்திய குழு நேற்று பிரதமர் தினேஷ் குண-வர்தன தலைமையில் மஹரகமவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் கூடியபோது இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது என்று அந்தக் கட்சி அறிவித்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் மக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதம செயலாளர் திஸ்ஸ யாப்பா ஜயவர்தன, உப தலைவர் இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயக்கொடி, பிரதி செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் யாதாமினி குணவர்தன, பிரதி செயலாளர் விஜய ரத்நாயக்க, உப தலைவரும் முன்னாள் பிரதி சபாநாயகருமான கீதாஞ்சன குணவர்தன உள்ளிட்ட மத்திய குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கலந்துகொண்டிருந்தனர்.



# பொலிஸ் நிர்வாகப் பிரிவுக்கு பொறுப்பாக லலித் பத்திநாயக்க

இலங்கை பொலிஸ் நிர்வாக நடவடிக்கைகளுக்கான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னதாக மேற்படி பதவியை வகித்த சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டதையடுத்து அந்தப் பதவிக்கு வெற்றிடம் நிலவியது.

அதன்படி, அந்த வெற்றிடத்துக்குச் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் பத்திநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் மத்திய மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகவும், இலங்கை பொலிஸின் நிர்வாக நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குமான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராகவும் செயற்படுவார் என்று தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேநேரம், மறு அறிவித்தல் வரை அவர் இந்தப் பதவியில் நீடிப்பார் என்று நேற்று கூடிய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அமர்வின்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.



# எரிபொருள் விநியோகம் தடையின்றி தொடருமாம்

## அமைச்சர் கஞ்சன விஜேசேகர தகவல்

நாடளாவிய ரீதியில் தடையின்றி எரிபொருள் விநியோகம் தொடரும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ள அவர், "அனைத்துப் பொருள்களின் கையிருப்பையும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பராமரிப்பதால், தடையற்ற எரிபொருள் விநியோகம் இடம்பெறும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவைக்கு உட்பட்ட சுத்திகரிப்பு நிலையம் ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் அதன் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்கும் என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# லாஃப்ஸ் சமையல் எரிவாயு விலையில் மாற்றம் இல்லை

ஓகஸ்ட் மாதத்தில் லாஃப்ஸ் சமையல் எரிவாயுவின் விலையில் மாற்றம் ஏற்படுத்தப்படமாட்டாது என்று லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஜூலை மாதத்தில் நிலவிய விலையிலேயே ஓகஸ்ட் மாதமும் லாஃப்ஸ் சமையல் எரிவாயு விற்பனை செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, 12.5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு 3 ஆயிரத்து 680 ரூபாவுக்கும், 5 கிலோ கிராம் லாஃப்ஸ் சமையல் எரிவாயு 1,477 ரூபாவுக்கும், 2.3 கிலோகிராம் எரிவாயு கொள்கலன் 591 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.






## 'சுடுசரம்' இனி படு சூடாக வரும்

பலராலும் பரவலாகத் தேடி வாசிக்கப்பட்டு வந்த கம்பவாரிதி இலங்கை ஜெயராஜின் 'உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்' என்ற வாராந்தப் பத்தி பூர்த்தியடைந்துள்ளது.

இப்போது முதல் நாட்டின் முக்கிய பிரமுகர்களுக்கு கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் 'சுடுசரம்' எனும் பெயரில் அவ்வப்போது வரையும் மடல்கள் காலை முரசில் பிரசுரமாகும். அந்த வரிசையில் முதலாவது இன்று இங்கு பிரசுரமாகின்றது. (ஆ-ர்)

டாக்டர் அர்ச்சுனா இராமநாதன்
சாவகச்சேரி.
11.07.2024

அன்புச் சகோதரா!
வணக்கம்.
நலம் வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.
அப் பிரார்த்தனை உங்களுக்கானது மட்டுமன்று,
சாவகச்சேரி மக்களின் நலம்வேண்டியும்,
யாழ்ப்பாண வைத்தியத்துறையின் நலம் வேண்டியுமாம்.
யாரும் எதிர்பாராத நிலையில்,
பெரியதொரு புரட்சியைத் தனிமனிதராய்ச் செய்து முடித்திருக்கிறீர்கள்.
உங்களின் துணிவிற்கு என் வாழ்த்துக்கள்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

நீங்கள் வாய் திறந்து உண்மையை உரைத்த பிறகுதான்,
நம் மண்ணில் வைத்தியத் துறையினர் சிலர் செய்யும்,
அட்டூழியங்கள் பற்றி அறிய முடிந்தது.
எத்தனை இழிவுகள்! நினைக்கவே மனம் கூசுகிறது.
வெளிப்படையாய் இத்தனை உண்மைகளை நீங்கள் பேசிய பிறகும்,
மேலிடம் உங்களை அகற்றப் பாடுபடுகிறதே அன்றி,
நீங்கள் சொன்னது பற்றி ஆராய முன்வருவதாய்த் தெரியவில்லை.
அதிலிருந்தே, நடந்த பாவங்களின் வேர்,
எதுவரை சென்றிருக்கிறது என்பதை உணர முடிகிறது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

ஆசிரியம், வைத்தியம் என்னும் இரண்டு துறைகளும்,
தொழில்கள் அன்றாம். அவை தொண்டுகள்!
அதனால்த்தான் இவ்விரு துறை சார்ந்தாரையும்,
தேவை முடிந்த பின்பும் மக்கள் வணங்கி நிற்கின்றனர்.
அத்தூய துறையில் இருந்து கொண்டு அதனையும் தொழிலாக்கி,
பணம் தேட முனைந்த சில ஈனர்களின் இழிவை,
உங்களது நெஞ்சத்துணிவால் உலகிற்கு வெளிப்படுத்தி விட்டீர்கள்.
பாராட்டுக்கள்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

தொடர்ச்சி▼

தொடர்ச்சி▲

உங்களை மரியாதைக் குறைவாய்த் திட்டியும், ஏன் அடித்தும்கூட,
பலர் செய்த மிரட்டல்களையெல்லாம் துச்சமென ஊதித்தள்ளி,
அநியாயத்திற்கு எதிராய் நிமிர்ந்து நின்ற
உங்களது துணிவை நினைத்துப் பெருமைப்படுகிறேன்.
எத்தனை மிரட்டல்கள்.
எத்தனை தூற்றுதல்கள்.
எத்தனை எதிர்ப்புக்கள்.
அத்தனையையும் கடந்து ஆச்சரியப்படுத்துகிறீர்கள்.
வியப்பாய் இருக்கிறது!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

உண்மையின் வலிமை மெல்லப்பரவி,
மக்கள் மனங்களில் படர்ந்து,
அவர்களையும் கொதித்தெழ வைத்ததும்,
உங்களின் பின்னால் கூட வைத்ததும்,
அதிசயமேயாம்!
ஆனாலும் பல தீய கரங்கள் ஒன்றிணைந்து,
உங்களை ஒருவிதமாய் அவ்விடத்தை விட்டு அகற்றிவிட்டன.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

உங்களது இச் செயல்களால் நான் மகிழ்ச்சியடைகிறேன்.
போருக்குப் பின்னான யாழ்ப்பாணத்தில் ஒழுக்கம் குறைந்துவிட்டது என்று,
பலரும் 'வெற்று' ஒப்பாரி வைத்துக் கொண்டிருக்கும் வேளையில்,
அந்த ஒழுக்கயீன வெள்ளத்துக்கும்,
சத்தியத்தால் அணைகட்ட முடியும் எனக்காட்டியது,
நீங்கள் அடைந்த முதல் வெற்றி.
எவரது தூண்டுதலும் இன்றி,
ஒரு தனி மனிதனுக்காய் இத்தனை மக்கள் கொதித்தெழுந்த வரலாற்றுச் சாதனை,
உங்களுக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றி.
இயக்கங்களால்கூட இந்தச் சாதனையைச் செய்யமுடியாமல் போயிற்று என்றுதான் சொல்வேன்.
அவர்கள் பின்னால் இருந்த ஆயுத பலமும், அதிகார சக்திகளும்
உங்களின் செயல்களுக்குப் பின்னால் இருந்திருக்கவில்லை.
அதனால்தான் அச் சாதனையை வரலாற்றுச் சாதனை என்கின்றேன்.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

மணிக்கணக்கில் பேசப்படும் உண்மைகளை விட,
நிமிடக்கணக்கில் நடைமுறைப்படுத்தப்படும் உண்மைகள்
மேலானவை என நிரூபித்து விட்டீர்கள்.
அதற்காகவும் எனது வாழ்த்துக்கள்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

நண்பனே! உங்களை எதிரிகள் பதவியிலிருந்து தூக்கி எறிந்துவிட்டாலும்
நீங்கள், அவர்களின் தலைகளின்மேல்
'அறம்' என்னும் கூர்வாளைத் தொங்கும்படி செய்துவிட்டுத்தான் சென்றிருக்கிறீர்கள்.
மக்களை மாக்களாக நினைந்து,
தம் இஷ்டப்படி இனி அவர்களால் நடக்கமுடியாது.
அவர்களின் செயல்களை மக்களின் ஆயிரம் கண்கள் இனிக் கண்காணிக்கப் போகின்றன.
திருந்த விருப்பப்படாவிட்டாலும், அவர்கள் திருந்துவதற்கான வழியை
வகுத்து விட்டுத்தான் சென்றிருக்கிறீர்கள்.
அந்த வகையில் உங்களது போராட்டம் வெற்றியாகத்தான் முடிந்திருக்கிறது.

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

அறம் நோக்கிப் போராடத் தலைப்பட்டால்
அவர்களின் பின்னால் மக்கள் தானாக அணி சேர்வார்கள் என்ற உண்மையை
மிகத் தெளிவாக நிலைநிறுத்தி விட்டீர்கள்.
இது நம் அரசியலாளர்களுக்கும் ஒரு பாடமாகட்டும்!

◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆

**டாக்டர் அர்ச்சுனா இராமநாதன்**
**பேராதனை,**
**26.07.2024**

நண்பா!
நான் உங்களுக்கு எழுதத் தொடங்கிய கடிதத்தின் மேற் பகுதியை
அப்படியே இடையில் விட்டுவிட்டு இலண்டன் செல்ல வேண்டி வந்து விட்டது.
பயணத்தால் வந்து, அக் கடிதத்தை முடித்து வெளியிடலாம் என நினைந்திருந்தேன்.
திரும்பி வந்து பார்த்தால் நிதானமாகத் தொடங்கிய உங்கள் செயல்கள்
'தறிகெட்டுப்' போய்க்கொண்டிருப்பதைக் கவனிக்க முடிந்தது.

தொடர்ச்சி▼

**தொடர்ச்சி▲**

அதிர்ச்சியடைந்தேன்!.
நல்லகாலம் கடிதத்தின் அந்த முதற் பகுதியை,
வெளியிடாமல் சென்றதை நினைந்து உள்ளூற மகிழ்ந்து கொண்டேன்.
◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆
மக்கள் தந்த உற்சாகத்தால் தடுமாறிப் போனீர்களோ?
அல்லது உங்களது இயல்பே இதுதானோ? தெரியவில்லை.
வரவரத் தேவையற்ற அறிக்கைகளை நாளுக்குநாள் வெளிப்படுத்தி
உங்களது மதிப்பை முடிந்தளவு குறைத்து வருகிறீர்கள்.
'யூடியூபைத்' திறந்தாலே உங்களது சிரித்த (இழித்த) முகத்துடன் கூடிய ஓர் செய்தி
தினந்தினம் காத்திருக்கிறது. – இது தேவைதானா?
'அளவிற்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' என்பதனை மறந்து போகாதீர்கள்!.
எங்கள் மண்ணில் தொடங்கப்படுகிற போராட்டங்கள் எல்லாம்,
நெறிப்படுத்துவார் இன்றி வீழ்ந்து போவதுதான் விதியோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது.
◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆
தற்போது தொடர்கிற உங்களது முயற்சிகளெல்லாம்
சத்தியத்திற்கான போராட்டமாகத் தெரியவில்லை.
அவை உங்களை நீங்களே ஓர் 'ஹீரோ'வாக்க முயலும் முயற்சியாகவே தெரிகின்றன.
உங்களைப் பற்றி நீங்களே பெருமையாக அலட்டிக் கொள்ளும் விடயங்கள்
கேட்பவர்களை வெட்கப்பட வைப்பதோடு அல்லாமல்,
உங்கள் தனி மனித ஒழுக்கத்தைப் பற்றியும் ஐயப்பட வைக்கின்றன.
செய்திப் பசியோடு திரிகின்ற ஊடகநிறுவனங்கள் உங்களைச் சூழ்ந்து கொள்ள,
நக்கலும், நையாண்டியுமாய் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல்,
அவற்றுக்கு நீங்கள் வழங்கும் பேட்டிகளால்
பலருக்கும் உங்களது மனநிலை பற்றிய ஓர் ஐயப்பாடு தோன்றியிருக்கிறது.
உங்களை "ஹீரோ"வாக்க நினைந்து,
அநியாயத்திற்கு "கொமேடியன்" ஆகிப் போய் நிற்கிறீர்கள்.
உங்களுக்காகக் குரல் கொடுக்க முன்வந்த மக்கள்
இன்று நாணித் தலைகுனிந்து நிற்கின்றனர்.
◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆
வீரியத்தைவிடக் காரியம்தான் முக்கியமானது என்பார்கள்.
தற்போதைய உங்களது செயல்களிலோ
காரியத்தை விட வீரியம்தான் மேல் ஓங்கி நிற்கிறது.
எதிரிகளுக்கு எதிரான தற்போதைய உங்களது சில செயல்களில்,
தேவையற்ற பரபரப்பும், பகைமூட்டிப் பார்க்கும் செயலும்,
வெற்றிக்காக, எல்லைகள் கடந்து செல்ல முயலும் தன்மையும்,
தலை தூக்கி இருப்பது தெளிவாய்த் தெரிகிறது.
எதிரிகளைப் பகை வயப்படுத்துவதை விட,
அவர்களை அறவயப்படுத்துவதே சிறந்தது.
இப்போது உங்களுக்கு அந்த நோக்கம் இருப்பதாய்த் தெரியவில்லை.
◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆
நீங்கள் உண்மை நோக்கிப் போராடுபவரானால்,
உங்களது செயல்களில் இத்தனை தடுமாற்றங்கள் வர நியாயமில்லை.
நோக்கம் மட்டுமல்ல, செயலும் சரியாக இருக்கவேண்டும் என,
நினைப்பவர்கள் தான் தமிழர்கள்.
அண்மையில் வெளிவந்த, 'அரசியலில் குதிப்பேன்!' என்ற உங்களது அறிக்கையிலிருந்து
உங்கள் செயல்கள் மட்டுமல்ல, நோக்கமும் தவறென்றே நினைக்க வேண்டியிருக்கின்றது.
அதிசயமாய் நிகழ்ந்த ஓர் அற்புத எழுச்சியை,
உங்களது புகழ் விருப்புக்காக இழந்து போனீர்கள்.
வருத்தப்படுகிறேன்.
◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆ ◆
வலிமையானவர்களின் பிழைகளை வெளிப்படுத்தக்கூடாது
என்ற கட்சியைச் சேர்ந்தவனல்ல நான்.
ஆனால் மக்கள் மன்று,
வெளிப்படுத்துபவர்களின் தூய்மையையும் மனதில் கொண்டுதான்,
வெளிப்படுத்தப்படும் விடயங்களை ஏற்கும் என்பது நிச்சயம்.
அபூர்வமாகக் கிடைத்த ஓர் நல்ல வாய்ப்பை இழந்து நிற்கிறீர்கள்.
உங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**"இன்பமே எந்நாளும் துன்பமில்லை"**

# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2024




இன்றைய நாள் ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். திறம்பட அறிந்து உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். தியானம் மேற்கொள்வது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று பணியில் வெற்றி காண்பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.அதனை சரியாகப் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவில் நல்ல பிணைப்பு காணப்படுகின்றது.

இன்று வரவும் செலவும் இனைந்து காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும். இதனால் சிறந்த ஆரோக்கியம் பராமரிக்கப்படும்.




முன்னுரிமைப்படி செயல்களை செய்வதற்கு மனதில் தெளிவு கொள்ளுங்கள். விழிப்புணர்வுடன் செயல்களைச் செய்து வளர்ச்சி காண்பீர்கள்.

பணியில் புதிய வாய்ப்புகள் உற்சாகத்தை அளிக்கும். உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

நெருங்கிய உறவினர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு பயனுள்ள ஆலோசனை கிடைக்கும். அது உங்கள் தாய் அல்லது தந்தையாகக் கூட இருக்கலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும்.

நிதி விஷயங்கள் இன்று சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சனை காணப்படாது. இன்றைய நாளை நீங்கள் மகிழ்ச்சியாக அனுபவிக்கலாம்.




இன்று உங்கள் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். சிறப்புடன் செயலாற்ற மனதில் தெளிவு தேவை.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். அவர்களிடமிருந்து தக்க சமயத்தில் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். அதன் மூலம் வளர்ச்சி காண்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை கழிப்பதன் மூலம் மன நிறைவைக் காண்பீர்கள்.

இன்று நிதி விஷயங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள நாள்.

தொடைகளில் விறைப்புத் தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மேற்கொள்வதன் மூலம் பலன் கிடைக்கும்.




இன்று உங்கள் செயல்களில் மிகுந்த அக்கறை காட்ட மாட்டீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பாமல் சிறந்ததை செயலாற்ற முயலுங்கள்.

பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் சுமுகமான உறவு காணப்படாது. தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல. உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால் பொறுமை இழக்காதீர்கள். இனி வரும் நாட்கள் சிறந்த நாட்களாக இருக்கும் என்று நம்புங்கள்.

நிதி விஷயங்களுக்கு இன்று சிறந்த நாளாக இல்லாத காரணத்தால் உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சமாளிக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




உங்கள் முடிவுகளை செயலாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள், மனதில் உள்ள குழப்பத்தை நீக்கி விடுங்கள். உங்கள் முடிவுகளை, கவனமாக திட்டமிட்டு செயலாற்றுவது நன்மை தரும்.

உங்கள் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை இருக்காது. அது உங்களுக்கு கவலையாக இருக்கும்.

மனதில் காணப்படும் உற்சாகம் காரணமாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாள். உங்களின் மனநிலையை சிறப்பாக பராமரித்து தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் வெற்றி கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு சீராக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். அதற்கான நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற்படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலியால் அவதிப்பட நேரும்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை பாதிக்கும் பதற்றத்தை கைவிடுங்கள்.

இலக்குகளை அடைவதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் முறையாக திட்டமிடவேண்டியது அவசியம்.

திருமண திட்டங்கள் பற்றிய உரையாடல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள். இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். பண இழப்பு அல்லது பணம் திருட்டுப் போகலாம்.

உங்கள் தாயின் உடல் நிலை பற்றி கவலைப் படுவீர்கள். அந்த வகையில் செலவுகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 02.08.2024




இன்று சிறந்த நாளாக இருக்காது. அசௌகரியங்கள் காணப்படும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியில் உங்கள் நேர்மை பாராட்டைப் பெரும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இல்லை. தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

இன்று அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். உண்ணும் உணவில் கவனம் கொள்ளுங்கள்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் சுய முயற்சி மூலம் கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையை திறமையாக கையாண்டு சவால்களை சமாளிக்க வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் அணுகுமுறை உங்கள் பிரிய மானவரின் பாராட்டைப் பெறும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. நீங்கள் கணிசமாக சேமிப்பீர்கள்.

கால் வலி மற்றும் தொடை வலி தவிர வேறு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. என்றாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




விரக்தியான மன நிலையை தவிர்த்து விட்டு மனதை மகிழ்ச்சியாக, அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள்

பணியில் கூடுதல் சுமைகள் காணப்படும். பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று பண வளர்ச்சி குறைந்து காணப்படும். பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மியை தவிர்த்திடுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக்கும்.




இன்று விவேகத்துடன் யோசித்து செயல்பட வேண்டும். கடந்த காலத்தைப் பற்றிய யோசனையைத் தவிர்க்க வேண்டும். சாதகமற்ற சூழ்நிலையையும் சமாளித்து அதனை உங்களுக்குச் சாதகமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுங்கள். அதிகரிக்கும் பணிச்சுமை காரணமாக வேறு வேலை தேடுவீர்கள்.

இன்று நீங்கள் காதலை எளிதாக எடுத்துக்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சாதரணமாக இருக்கும். என்றாலும்,

